டார்வினின் பூனைகள்

சு. தவச்செல்வன்

டார்வினின் பூனைகள்

தவச்செல்வன் தனிமனித
வாழ்வினதும் சமூக இருப்பினதும்
பல மூலைகட்கும் நம்மை இட்டுச்
செல்வார். அதே விதமான
கவனத்துடன் விரிந்த
வெளியையும் துழாவுவார்.

டார்வினின் பூனைகள்

சு. தவச்செல்வன்

கொட்டகலை தமிழ்ச்சங்கத்தின் வெளியீடு

டார்வினின் பூனைகள்

டார்வினின் பூனைகள் | கவிதைகள் மின்னஞ்சல் | sthava21@gmail.com © | சு. தவச்செல்வன் முதல் பதிப்பு | செப்டெம்பர் 2015 வெளியீடு : கொட்டகலை தமிழ்ச்சங்கம் வடிவமைப்பு | இரா. பிரதீபன் அட்டைப்படம் | இரா. பிரதீபன் பக்கங்கள் | 84 அளவு | A5 எழுத்தளவு | 11 புள்ளி

Darvinin Poonaigal | Poems E-mail | sthava21@gmail.com © | S. Thavachelvan First Edition | September 2015 Publish by | Kotagal Tamizh Sangam Designed by | R. Pratheepan Cover Page by | R. Pratheepan Pagers | 84 Size | A5 Font Size | 11 point Price | 300.00 LKR

விலை 300.00

ISBN 978-955-44552-3-8

எந்தவித சுயநலத்தையும், இலாபத்தையும் எதிர்பாராது
தொழிற்சங்க அரசியலுக்காக
அடிமட்டத்தில் உழைத்து,
அடையாளமிழந்து,
உதிர்ந்துபோன
தொழிலாளர்களுக்கு

முன்னுரை

தவச்செல்வன் தனது முதலாவது கவிதைத் தொகுதிக்கு என்னிடம் முன்னுரை கேட்டபோது அவரை எனக்கு முன்பின் தெரியாது. எனினும், அவருடன் நேரிற் சற்றுப் பேசிய பின்பு எழுத உடன்பட்டேன். அவருடைய கவிதைகளில் உள்ள குறை நிறைகளைக் குறிப்பிட்டே என் முன்னுரையை எழுதினேன். அவர் மீண்டும் என்னிடம் சில சொற்கள் எழுதப் கேட்பது மகிழ்ச்சியான விடயம்.

அவருடைய “சிவப்பு டைனசோர்கள்” கவிதைத் தொகுதிக்கு நல்ல வரவேற்பு இருந்ததாக அறிந்தேன். அதன் பின்பு அவருடன் தொடர்பு இருந்துவந்துள்ளது. தன்னுடைய ஆய்வுக் கட்டுரையொன்றை வாசித்துக் கருத்துரைக்குமாறு கேட்டார். கேட்டுச் சில மாதங்கள் கழித்தே கட்டுரை பார்வைக்குக் கிடைத்தது. ஆற்றல் மிக்க ஒரு திறனாய்வாளரும்

ஆய்வாளருமாக அவரை என்னால் அடையாளங்காண முடிந்தது.

தேசிய கலை இலக்கியப் பேரவையின் ஆண்டுச் சிறப்பிதழான "புது வசந்தம்" சஞ்சிகைக்காகக் கவிதையோ கட்டுரையோ தருமாறு அவரிடம் கேட்டபோது, மிக்க தயக்கத்துடன் தான் எழுதிய சிறுகதைகள் சில உள்ளதாகவும் அவற்றைப் பார்ததுக் கருத்துக் கூற முடியுமா எனவுங் கேட்டார். அவை அதிக தாமதமின்றிக் கிடைத்தன. கிடைத்த மூன்றையும் பாவித்தேன். வழமைக்கு மாறான ஒரு நடையில் ஆனால் எளிதாகப் பின்பற்றக்கூடிய முறையில் அவருடைய கதைகள் இருந்தன. அவரிடம் "நீங்கள் ஒரு நல்ல கவிஞர். எனினும் நீங்கள் அதினும் நல்ல கதைசொல்லி. தயவுசெய்து மேலும் கதைகளை எழுதுங்கள்." என ஊக்குவித்தேன். சென்ற ஆண்டு முதல் அவர் எழுதிய கதைகள் புதுவசந்தம், தாயகம், ஞாயிறு தினக்குரல் ஆகிய ஏடுகளில் வெளிவந்து மிகவும் மெச்சப்பட்டன.

அவர் தன்னுடைய கவிதைகளை என்னுடைய பார்வைக்கு அனுப்புவது அரிது. ஆனால் சில மாதங்கள் முன்பு தானெழுதிய பத்துக் கவிதைகளை எனது பார்வைக்கு அனுப்பியிருந்தார். அவற்றில் அதி பொருத்தமான ஆறைத் தெரிந்து தாயகத்துக்கு அனுப்பினேன். மகிழ்வுடன் பிரசுரித்தனர். அதன் பின்னர் அண்மையில் தனது இரண்டாவது கவிதைத் தொகுதியின் வரைவை என்னுடைய பார்வைக்கு அனுப்பியிருந்தார். அவருடைய சிறுகதைத் தொகுதியின் வரவைக் காத்திருந்த எனக்கு அது ஒரு சிறிய ஏமாற்றமே. ஏனெனிற் தனது முதலாவது கவிதைத் தொகுதி மூலம் அவர் ஏலவே தன்னை ஒரு ஆற்றலுடைய கவிஞராக நிறுவி விட்டார். அவரை ஒரு சிறப்பான கதைசொல்லியாக நமது படைப்புலகம் அறிவதை நான் விரும்புகிறேன். அவர் என்னை ஏமாற்றமாட்டாரென நம்புகிறேன்.

உண்மையில், இத் தொகுதியில் தவச்செல்வன் தனது கவிதை மொழியை மேலுஞ் செம்மையாக்கியுள்ளாரென்று சொல்லவேண்டும். இத் தொகுதியிலுள்ள கவிதைகள் முன்னைய சிவப்பு டைனசோர்கள்" தொகுதியின் கவிதைகளினுங் கூடிய இறுக்கத்துடனும் செய்நேர்த்தியுடனும் உள்ளன. படிமங்களைக் கையாளுவதில் தவச்செல்வனுக்குள்ள ஆற்றல் பற்றிப் போனமுறை கூறிய நினைவுண்டு. இத் தொகுதியிற் படிமங்கள் கவிதைப்பொருளுக்கு மேலும் பொருத்தமாக உள்ளமை ஒரு சிறப்பு. தவச்செல்வனிடம் நுட்பமான நகைச்சுவை உணர்வுண்டு. அதை இத் தெகுதியிற் பல கவிதைகளிற் காணலாம். இப் பண்புகள் சிறப்பாக இணைந்த கவிதைகளில் இரண்டு நான் சொல்வதைத் தெளிவாக்கும்:

யானை முடியும் சீன வியாபாரியும்

சீன தேச அரசனைக் காணச்சென்றான்
ஈழக் குடிமகனொருவன்
இருவரும் தேநீர் அருந்தும் பொழுது
அவனது விரல் மோதிரத்தின் யானை முடியை
அடைய நினைத்த அரசன்,
முடிக்காக யானையையும்
யானைக்காக அது குளிக்கும் நதியையும்,
ஒதுங்கி நிற்கும் மரத்தையும்
மரத்திற்காகக் காட்டையும்
காட்டிற்காக நிலத்தையும்
நிலத்திற்காக ஊரையும்
ஊரிற்காக நாட்டையும்
முழுத் தீவையும் அடைய வேண்டியதாயிற்று.

பொய்க் குதிரை

சமையல் பாத்திரங்களை
அடுப்படியிலிருந்து தூக்கிவைக்கவும்
சாப்பாட்டு மேசையைத்
துடைத்துச் சுத்தமாக்கவும்
மிளகாய்க் குவியலை
வெய்யிலில் உலர்த்தவும்
தொலைக்காட்சி வானொலிப் பெட்டிகளைத்
தூசுதட்டவும்
எனது பிள்ளை கழித்த சிறுநீரைத்
துடைக்கும் வேலையையும் செய்து கொண்டிருக்கிறது
முன்னாள் கங்காணியின்
பழைய கோட்டு

இரண்டு கவிதைகளும் எதைப் பேசுகின்றன என ஊகிப்பது கடினமல்ல. ஆனால் அவற்றுக்கு அதற்கப்பாலான முரணற்ற பல வாசிப்புக்களும் இயலும். தவச்செல்வன் தனிமனித வாழ்வினதும் சமூக

இருப்பினதும் பல மூலைகட்கும் நம்மை இட்டுச் செல்வார். அதே விதமான கவனத்துடன் விரிந்த வெளியையும் துழாவுவார்.

அனைத்தையும் விடத் தன்னை ஒரு நல்ல கவிஞராக வைத்துக்கொண்டு இளம் கவிஞர்களையும் ஊக்குவிக்கும் அவருடைய செயல்கள் பற்றியும் அறிந்த போது மகிழ்வாயிருந்தது. அது நமது இலக்கிய உலகில் வரவர விதிவிலக்காகிவரும் ஒரு போக்கு.

இப் படைப்பு முன்னையதினும் பரவலான படிப்புக்கும் சுவைப்புக்கும் ஆழ்ந்த பரிசீலனைக்கும் உள்ளாகுமென நம்புகிறேன்.

பேராசியர். சி. சிவசேகரம்

இல. 2,
ரெகின்லேண்ட் பிளேஸ்,
கொழும்பு - 03.

ஆசிரியருரை

'சிவப்பு டைனோசர்கள்' கவிதைத் தொகுதி வெளிவந்தபோது அது மலையகக் கவிதைச் சூழலில் பரவலாக பேசப்பட்டது, விவாதிக்கப்பட்டது. குறிப்பாக பெருவிரல் நண்பர்கள் அக்கவிதைகளின் உருவம் குறித்தும் மொழி குறித்தும் விவாதித்திருந்தார்கள். அக்கவிதை நூலுக்கு கொடகே தேசிய விருது கிடைக்கப்பெற்றதும் மேலும் பல இடங்களில் அத்தொகுதி தொடர்பாக கலந்துரையாடப்பட்டது எனினும், அக்கவிதைகளின் இயக்கம் பற்றி சில விமர்சனங்கள் எழுதப்பட்டிருந்தாலும் அவற்றின் பேசுபொருள் குறித்து ஆழமான விவாதங்கள் இடம்பெறவில்லையென்றே கூறவேண்டும்.

இச்சூழ்நிலையிலேயே எனது இரண்டாவது கவிதைத் தொகுதியான 'டார்வினின் பூனைகள்' வெளிவருகிறது. இத்தொகுதியிலுள்ள கவிதைகளும் மூன்று இயக்கங்களைக் கொண்டவையே! மலையக சமூக அரசியல்

பிரச்சினைகள் இன்றும் பேசப்படக்கூடியனவாகவே உள்ளன. அதையும் கடந்து தமிழர்கள் மீதான இனநெருக்கடிகள், இன அழிப்புகள் தொடர்பான உணர்வுகள், அதற்குமப்பால் சென்று பார்க்கும்போது இன்றைய உலகமய சூழலில் கருப்பொருள் தேசங்களைக் காவுகொள்ளும் நிலையில் நாமெல்லோரும் இலங்கை தேசத்தவர் என்ற ஒற்றை சிந்திக்கவும் கடமைப்பட்டுள்ளோம். இப்பொருள்களில் உள்ளடங்கியுள்ள கவிதைகளின் தொகுப்பே 'டார்வினின் பூனைகள்'.

இக்கவிதைகளின் தொகுப்பிற்கு 'டார்வினின் பூனைகள்' என்ற பெயர் வைத்ததன் பின்னணி, அக்கவிதை பலரது அபிப்பிராயமாகவும் அப்பெயரின் வித்தியாசம் புதுமையாகவும் இருந்தமையெனக் கூறுவதைவிட இத்தேசம் எதிர்கொள்கின்ற பிரச்சினைகளின் மையம் இக்கவிதை பேசுகின்ற விடயமாகத்தான் இருக்குமென்பது எனது நம்பிக்கை.

மனிதகுல வரலாற்றில் டார்வின் முன்வைத்த 'வலியது வெல்லும்' என்ற கோட்பாடு ஒரு வகையில் வலிமைப்படைத்தவர்களின் அரசியலாகவே பயன்படுத்தப்பட்டு வருகிறது. எனவே, அக்கோட்பாட்டை எனது பார்வையில் இச்சமூகத்துடன் பொருத்திப் பார்த்துள்ளேன். எனது பார்வை வாசகரின் பார்வையில் எவ்வாறான சலனங்களை ஏற்படுத்துகின்றதென்பதை வரும் விமர்சனங்களை பார்த்துதான் அறிய வேண்டும்.

சு. தவச்செல்வன்,

இன்வெரி எஸ்டேட்,
டிக்கோயா.

071 54 22 731 | sthava21@gmail.com
076 74 22 731

நன்றி

பேராசிரியர் சி. சிவசேகரம், எழுத்தாளர் மு. சிவலிங்கம், ஆசிரிய ஆலோசகர்கள் : திருமதி. சகுந்தலாதேவி, திரு. வீ. நல்லதம்பி, கவிஞர்கள் : சண்முகம் சிவகுமார், வே. தினகரன், மு. கீர்த்தியன், சுதர்ம மகாராஜன், நண்பர்கள் : மெ. செந்தில்வேல், வ.சிவராஜ், ஜெயா, மாணவிகள் : மதுஷா, மதுஷா தாட்சாயினி, ஷார்மலி, நிரோஷினி.

இதழ்கள்

தீ, புதுவசந்தம், தாயகம், ஜீவநதி, புதிய தளம், சுவைபுதிது, காக்கைச் சிறகு.

பூனையின் தடங்களில்

1.	முதலாவது புல்லட்	15
2.	எடிசனும் நிலவும்	16
3.	விளிம்பில் கேட்கும் குரல்	17
4.	நிலாக்காட்சி	18
5.	அந்நியப்படுத்தப்பட்ட காதலன்	19
6.	ஒளியைத் தின்றவன்	20
7.	பூவும் பறவையும்	21
8.	மத்திய வர்க்கப் பூனை	22
9.	1983 ஆடி	24
10.	பால் மரக்காடும் குமாரியும்	25
11.	நீ அழைத்துச் செல்வது எனக்கான பாதையல்ல	26
12.	காகத்தின் மரணம்	27
13.	வார்த்தை ஜாலம்	28
14.	ஓர் அடிமையின் இறுதி மூச்சு	29
15.	மலையின் காதல் பாடல்	30
16.	கிறிஸ்துவுக்குப் பின்	31
17.	கண்ணன் என் காதலன்	32
18.	ஆடி மழையும் ஊமை வெய்யிலும்	33
19.	சுமதியின் எஜமானியின் நேர அட்டவணை	34
20.	விசாரணை	35
21.	ஜேம்ஸ் டெய்லரின் கல்லறையிலிருந்து	36
22.	வீடு என்னைப் பூட்டிவைக்கிறது	37

23. மஞ்சள் மூக்குப் பறவை 38
24. நீரின்மேல் எழுதுகிறான் நம் தலைவன் 39
25. அறுவடைக் காலம் 41
26. எதிரொலிப்பு 42
27. கடவுளின் தரிசனம் 43
28. என்னருமைக் காதலி மாம்பழ அழகி 44
29. இறந்த தந்தையின் நாட்குறிப்பிலிருந்து 45
30. காதல் கரைந்த காலிமுகத் திடல் 47
31. டார்வினின் பூனைகள் 48
32. பருவம் கொத்திப்போகும் பறவை 49
33. ஜேம்ஸ் பெக்கருக்கு ஒரு கடிதம் 50
34. காற்றில் வரும் கீதம் 51
35. அலையில் தெறிக்கும் விம்பம் 52
36. வண்ணாத்தியின் கண்கள் 53
37. நிமிர்வு 54
38. உனது கடைசிப் பயணம் 55
39. இரவில் பேசிக்கொள்ளும் மலைகள் 56
40. இரும்புத் திரையும் சம்மட்டியும் 57
41. துப்பாக்கியின் நிழல் 58
42. வடக்கிலிருந்து வரும் பறவை 59
43. அரும்பின் வலி 60
44. முள்ளந்தண்டிலிகள் 61
45. இசையில் விழிந்த இரவு 62
46. கிழக்கு சரணாலயமும் தென்கிழக்குப் பறவைகளும் 63
47. யானை முடியும் சீன வியாபாரியும் 64
48. கானல் காற்று 65
49. இளங் கிழவி 66
50. அக்கினி பிரவேசம் 67
51. அமைதியாய்த் தாங்கு 68
52. எதிர்க்கப் பழகு 69

53.	அடையாளம்	70
54.	எஜமானின் ரசனைக் குறிப்பு	71
55.	தீயை விற்க முடியுமா உன்னால்?	72
56.	நம் தேசம் பாடல்களால் ஆனது	73
57.	நூற்றாண்டுகால இளமை	74
58.	விருட்சங்களைச் சுமக்கும் பறவை	75
59.	பொய்க்குதிரை	76
60.	மேய்ச்சல் சங்கிலி	77
61.	தடை தாண்டல்	78
62.	வெறிச்சோடிய முற்றம்	79
63.	நிவாரணம் என்ற சொல்லும் பொருளும்	80
64.	பிரமாண்டமான கொலை	82
65.	சாரலில் நனைந்த மண்	83
66.	தலைகீழ் விம்பம்	84
67.	ஓவியம்	85
68.	வெளிநாட்டுப் பறவைகள்	86
69.	காடைக் குருவிகளும் கங்காணிச் சத்தமும்	87
70.	காத்திருக்கும் பூங்கொம்பு	88

முதலாவது புல்லட்

கைத்துப்பாக்கியொன்றை எடுத்தேன்
ஆயிரத்தை தாண்டிய இயக்கங்கள்
அதன் உரு விம்பத்தில்
துப்பாக்கியின் வெற்று உடலில்
ஒவ்வொரு புல்லட்டாக சொருகும்போது
பிரச்சினைகளால் அது நிரம்பியது
மூக்கின் நுணிக்கு நேரே நீட்டி
பார்வையை செலுத்தியபோது
நூற்றுக்கும் மேற்பட்ட முகங்கள்
வந்து போனாலும்
முதலாவது புல்லட் என் தலைவனின்
நெற்றியையே குறிபார்த்தது

எடிசனும் நிலவும்

எனது முதல் நிலவின்போது
முயல் அமர்ந்திருப்பதாகவும்,
பாட்டி வடை சுட்டுக் கொண்டிருப்பதாகவும்
கதையுடன் இரவை ரசித்தேன்
அப்போது சிமினி விளக்கின் அடியில்
நாங்கள் ஒன்று கூடினோம்
சிதறும் ஒளியில் எங்கள் மகிழ்ச்சி புதைந்திருந்தது.

முதன்முதலாக ஆம்ஸ்ட்ரோங்கை படித்தோம்
நிலவு எங்களிடமிருந்து தூரமாகியது
அறிவியல் ஆசிரியர் எடிசனை
அறிமுகப்படுத்தினார்.
சிமினி விளக்கு தொலைந்தே
போய்விட்டது.

பல தசாப்பதங்களைக் கடந்து
மின்சார ஒளியில் தேடிக் கொண்டிருக்கிறோம்.
அப்போது தொலைந்த மகிழ்ச்சியான நாட்களை

விளிம்பில் கேட்கும் குரல்

எங்கள் புன்னகையெல்லாம்
நீ அமைத்திருக்கும் உயர்ந்த
மாடியின் உச்சியில் வைத்து கொழுத்து
எமது நிம்மதியான உறக்கங்கள்
அனைத்தையும் தின்று தீர்த்துவிடு
எம் மூதாதையின் பாடல்களை
மண்ணோடு மண்ணாக்கு
நானும் எனது குழுக்களும் வாழும்
சிறிய துண்டு நிலத்தையும் விற்றுவிடு
ஆயுளை பெருக்கி பிரவகிக்கும்
என் தேசக்காற்றை
பிடித்து எரி; நஞ்சாக்கு,
எல்லாவற்றை பஸ்பமாக்க முடியும்
உன்னால்
தலைமுறை தலைமுறையாக எம்மில் வாழும்
நம்பிக்கையைத் தவிர!

நிலாக்காட்சி

அந்தர வெளியெங்கும் இரசாயன நெடி
மண்டிய புகை பார்வைகளைக்
குருடாக்கிக்கொண்டிருந்தது
துண்டித்துக்கிடந்த மணிக்கட்டுப் பகுதியை
கையோடு பொருத்திக் கொண்டிருந்தான்
ஒரு முதியவன்
முண்டமொன்றின் மார்பு நுனியை
சூப்பிக்கொண்டிருந்தது
ஒரு ஆண் குழந்தை
தூரத்தே பதுங்கு குழியில்
அம்மணமான பினமொன்றை
புணர்ந்து கொண்டிருந்தான் ஒரு சிப்பாய்
எந்தக் கடவுளும் அவர்கள் முன்
தோன்றவில்லை

அந்நியப்படுத்தப்பட்ட காதலன்

பிறப்பிலிருந்தே
அவளை நான் காதலித்தேன்
அவள் மடியில் தலைவைத்துக் கிடந்தேன்

நீ நேற்று வந்தவன்
நானே அவளது முதற் காதலன்
நீ அவளது வெளிப்புற அழகைக் கண்டு
மயங்கிய இரண்டாமவன்

நாளை நீ அவளது கணவனாகலாம்
உயர்ந்த "கெசினோ"வுக்கும்
அவளை நீ அழைத்துச் செல்லலாம்

அவள் என்னையே அதிகம் நேசிப்பவள்
அவளது இதயத்தில் முதலில் அமர்ந்தவன் நானே
அவள் என் தொடுகையில் வனப்படைந்தவள்
அவளது கூந்தலின் வாசனையை
முதலில் நுகர்ந்தவன் நானே!

அவளது இடையின் கனிய வளங்களின்
வசீகரத்திற்கு மட்டுமே ஆட்பட்டவன் நீ

நீ அவளை அடைந்தனுபவிக்க எண்ணுகிறாய்
நான் அவளை இன்னமும் நேசிக்கிறேன்
ஏனென்றால் நாடு எனது.

ஒளியைத் தின்றவன்

ஒளியை பிடித்துப் பிடித்துத் தின்கிறான் அவன்.
வட்டமான ஒளியை வளைத்து வளைத்துப்
பிடித்துத் தின்கிறான்.
அவன் சூரிய ஒளியை
கண்ணாடி மூலம் பிடித்துச் சாப்பிடுகிறான்.
ஓடும் மின்னலை வாழைத் தண்டில் நுழைத்து
உறிஞ்சிக் குடிக்கிறான்.
ஒரு கோப்பையில் நிலவை படியச்செய்து
வில்லைகளை விழுங்குவதுபோல் விழுங்குகிறான்.
நட்சத்திரங்களை எண்ணி எண்ணிச் சாப்பிட்டதால்
வெளிறிப்போனான் அவன்.
இனி அவனில் இருள் இல்லை.

பூவும் பறவையும்

இதழ் விரிந்த சப்பாத்திப் பூவில்
சொண்டை நுழைத்து தேன் உறிஞ்சுகிறது
வால்நீண்ட கொண்டலத்திப் பறவை
தேன் தீர்ந்த சிவப்பு மலர்
நிறமிழந்து, செழிப்பிழந்து அதே இடத்தில் நிலம்விழ
பூவாய் மாறுகிறது கொண்டலத்தி
தேன் தேடியலையும் நீள்வால் அணில்
மீண்டும் வாய்நுழைக்கிறது
நிறமிழந்த சப்பாத்தி மலரில்

மத்திய வர்க்கப் பூனை

நான் கவனிப்பதேயில்லை
ஒவ்வொரு நாளும் நிலம் விற்கப்படுகின்றது
மொபைலில் கதைத்தல், ஈமெயில் பார்த்தல்,
முகநூலில் உலாவுதல் என
என் பொழுதுகள் கழிந்துவிடுவதால்
இவற்றை நான் கண்ணெடுப்பதில்லை
ஆனாலும் நிலம் விற்கப்படுகின்றது

வேலைக்குப் போய் வீடு திரும்புதல்,
கார்கில்ஸ் செல்லுதல்,
ஸ்கைப்பில் இருத்தல்,
ப்ரைட் ரைஸ் சாப்பிடுதல், மென்பானம் அருந்துதல்,
எனது நாளாந்த வேலையாயிருக்கும்போது
இவற்றிற்கு எங்ஙனம் நேரம் ஒதுக்குவது
ஆனாலும் நிலம் பறிபோய்க் கொண்டிருக்கிறது

மதுபானக் கடைகளில் ஒதுங்குதல்,
நண்பர்களுடன் குதூகலித்தல்,
எஸ்.எம்.எஸ். பகிர்தல்,
சினிமாவில் மூழ்குதல் என
எண்டர்டைன்மன்டுக்கே நேரம் போதாமலிருக்கும்போது
நான் எங்கே இவற்றைப் பேச முடியும்?
ஆனாலும் நிலம் கொள்ளைபோய்க்கொண்டிருக்கிறது

இவற்றைப் பற்றி; நான்
இதற்கு முன்பும் கதைத்ததில்லை
இப்பொழுதும் கண்டுகொள்ளவில்லை
களஞ்சியத்தில் தானியத்தைத் திருடும்
ஒரு எலிக்கெதிராய்க் கூட
என் மீசையை முறுக்கியதில்லை
இனியும் எப்படிப் பேசுவேன்
நாளை நிலம் இல்லாமல் போகும்போது

1983 ஆடி

சகோதர் இனத்தவனே நிழலாடுகிறதா?
எண்பத்து மூன்றின் "வன்செயல்".
"தாராபுர" வில் வேலை முடித்து வீடு திரும்பிய
என் நண்பனின் முதுகைப் பிளந்த
உனது வாளின் பளீச்சீடு,
காரணமற்ற பகையால்
என் சகோதரனின் இடுப்பில் துளையிட்ட
உனது ஈட்டி முனைகள்
என்னில் இன்னும் நிழலாடுகிறது.
பூப்புச்சடங்கு முடித்துத் திரும்பிய பூவையை
பேருந்தின் இருக்கையில் கசக்கிப் பிழிந்தது
அவளது பெற்றோர் உம் காலடியில் கதறியழுதது
அதுவும் இன்றும் நிழலாடுகிறது.
மீண்டுமொரு ஆடியில்
நாம் கோழையென்றெண்ணிய உன் படைத்தரப்பு
தேயிலைச் சூழ்ந்த என் முற்றத்தில் முற்றுகையிட்டபோது
கடாவின் தலைபோல் உருண்டு விழுந்த
உனது தலைவனின் தலையைச் சாய்த்த
எனது வாளின் கூர்மையும்
வெறியாறிய என் நெஞ்சும்
இன்னும் இன்னும் நிழலாடுகிறது.

• இக்கவிதை 1983 வன்செயலில் கொழும்பில் தாக்கப்பட்ட மலையகத்தைச் சேர்ந்த சிலர், 1986 இல் ஒட்டரி சந்தியில் வைத்து, மீண்டும் மலையகத் தமிழர்கள் மீது தாக்குதலை ஏற்படுத்த வந்த ஆமிக்கார தலைமையதிகாரி ஒருவரின் தலையை வெட்டிச்சாய்த்து திருப்பி அனுப்பிய சம்பவத்தை குறிக்கிறது.

பால் மரக்காடும் குமாரியும்

காலம் வறண்டுக்கொண்டிருக்கிறது!
இருபக்க லயவரிசைக்கு நிழலைப் பூசுகின்றன
றப்பர் மரங்களின் உச்சித் தலைகள்.

வீட்டில் சிதறிக்கிடக்கும் வறுமைக்காகிதங்களை,
றப்பர் விறகு கொண்டு எரித்திடும்பொழுது
அவளது அடுப்படி மகிழ்ச்சி கணப்பேறும்.

பாம்புப் புற்றுக்களுக்கு நடுவே
நெளிந்து சென்று றப்பர் காட்டின் மையத்தில்
விடியலை வரவேற்கும் அவளது கால்கள்.

மனதை கொதிப்புற வைக்கும்
வீட்டுத் துன்பங்கள் அனைத்தும்
பால்மர நிழலில் குளிரேறும் அவளுக்கு

மரத்தை கீறிச் சிரட்டையைக் கட்டும்வேளை
அட்டைகள் பத்து அவளது விரல்களை வெட்டும்

மறுநாள்
மரந்தோறும் வடிப்பாள் பாலை
குழந்தையின் எதிர்காலக் கனவை
நிதர்சனமாக்கும் நினைப்போடு

நீ அழைத்துச் செல்வது எனக்கான பாதையல்ல

மீண்டும் எங்களைக்
கறுத்த இரவிலேயே நீ அழைத்துச்செல்கிறாய்!
நீ அறிவாய்
இது எமக்கான பாதையல்ல என்பதை!

இது ஒளிப்பிழம்புக்கான பாதையல்ல
இவ்வழி சேற்றெருமைகளுக்கானவையாக இருக்கலாம்,
இவ்வழியே நடப்பது வனாந்தரத்திற்குரியதாகலாம்,
சிலவேளை கடலில் நடப்பது போன்றுமிருக்கலாம்.

நீயறிவாய்!
இப்பாதையில் என் கால்கள் நடக்காது என்பதை
ஆனாலும் நீ அழைத்துச் செல்கிறாய்
தனித்தல்ல
என் பின்னே வரும் மக்களையும்.

காகத்தின் மரணம்

காகத்தின் மரணத்திற்கு அழைப்பு வந்தது காற்றில்
வானைச் சொந்தமாக்கிய அதன் உறவுகளின் குரல்
மழையை திறந்து விட்டது
மரங்களின் கிளைகள் எல்லாம்
கறுப்பு இலைகளைச் சூடியிருந்தன
வான்வெளியை நிரப்பின
கறுப்பு இறகுகள்
கரைந்திடும் அவற்றின் கருங்குரலால்
கல்லும், கரைவது போலிருந்தது.
பட்டாசைக் கொழுத்தி வீசினான்
திறந்த வாசலின் இருளில் நிற்கும்
ஒற்றை மனிதன்.

வார்த்தை ஜாலம்

பிரகாசமற்ற உனது
மெத்தன வார்த்தைகளைத் தூக்கியெறி
வெள்ளி முலாமால் மின்னுகின்றன அவை
இருளால் கோர்க்கப்பட்ட மாலை போன்றது
உன் வார்த்தையின் எழுத்துக்கள்
அவை மக்களில் இருந்து விலகி
வெகுதூரம் பறக்கின்றன

வியர்வையில் நனைந்த வார்த்தைகளை
குருதியில் உழலும் வார்த்தைகளை
குரல்வளை நெறிக்கப்பட்ட வார்த்தைகளை
அவை திரையிடுகின்றன.

ஓர் அடிமையின் இறுதி மூச்சு

முக்கித்தள்ளு தேசமே
முக்கித்தள்ளு
உனது பிரசவத்தில்தான்
தலைகுனியாப் புதிய வகை மலரொன்று
இம்மண்ணில் வேரூன்றவிருக்கிறது.
முக்கித்தள்ளு தேசமே
உதிரம் ஓடும் வரை, வியர்வை வழியும் வரைத் தள்ளு
உன் எசமானுக்காக நீ விடுகின்ற இறுதி மூச்சு
இதுவாக இருக்கட்டும் - தள்ளு
ஊதியத்திற்கு முதுகு வளைக்கும் இறுதிமூச்சு
இதுவாயிருக்கட்டும் - தள்ளு

முக்கித் தள்ளு தேசமே
முக்கித் தள்ளு

மலையின் காதல் பாடல்

மலைக் காகம் பாடுகிறது
அது முருங்கை மரத்தின் வட்டச் சிற்றிலையில்
மலையின் காதல் பாடலை
தன் கருஞ்சொண்டால் எழுதுகிறது.
தலைவனும் தலைவியும் நிமிர்ந்து பார்க்கிறார்கள்
குச்சிகளால் நெய்யப்பட்ட அதன் கூட்டை
காகம் விழித்து எழுதுகிறது அவர்களின் வீட்டை
தலைவனும் தலைவியும் மீண்டும்
பச்சைக் காகங்களாய் மாறி
உயர உயர பறக்கிறார்கள்
சவுக்கு மரங்களின் உச்சியில்
தனித் தனியாய் படர்ந்திருக்கும்
அதன் கூடுகளை ரசித்தபடி.

கிறிஸ்துவுக்குப் பின்

உலகம் தொடங்குகிறது
எங்கும் வெட்டவெளி
இலையுதிர்ந்த மரத்தினடியில்
நிர்வானமாய் நின்றிருந்தார்கள்
ஆதாமும் ஏவாளும்.
கடவுள் கொடுத்த கனியுடன் இறங்கியது பாம்பொன்று
இருவரும் கடித்துச் சுவைத்துத் துப்பிய
விதையிலிருந்து உருவான விருட்சங்கள்
மீண்டும் விதை பரப்பி
உருவாகியது பெருங்காட்டுவெளி.

கண்ணன் என் காதலன்

மலர்ந்த சூரியனை அணிந்துகொண்டு
நீ புறப்பட்டாய் ! அப்போது கருப்பு மேகங்கள்
எம்மைச் சூழ்ந்திருந்தன.
வெள்ளை காற்சட்டை சிவப்பு மேலங்கியுடன்
உனது தோளில் தொங்கி ஒளிர்ந்தது வாளொன்று.
எம் சகோதர இனத்தவர்கள் எம்மைச் சுற்றி
இருண்ட வரைபடத்தை வரைந்து கொண்டிருந்தார்கள் - அப்போது
வளைந்து நின்ற எம்மினத்தின் தோள்களை நிமிர்த்த
நாம் கூட்டாகப் பயணித்தோம்.
எம் முன்னே சூழ்ந்திருந்த இருளைக்கீறித்,
தடங்களை அமைத்துச் சென்றாய் நீ
சினங்கொண்ட எறும்புவரிசை போல,
நாங்கள் உன் அடிதொடர்ந்தோம்.
அடைத்துக்கிடந்த கதவு ஒவ்வொன்றிலுமிருந்து
துப்பாக்கிகள் எம்மை வரவேற்றன.
துப்பாக்கியோசையைத் துளைத்துச் சென்றவன் நீ.
வேட்டுக்களை கண்டு நடுங்கினோம் நாம்.
எதிரி முன் துணிவுகொண்ட உன் மார்பு
சல்லடையாக்கப்பட்ட காலையில் புலர்ந்தது.
நாம் கறைகளை கண்ணீரில் கழுவினோம்.

• 1983 இல் இடம்பெற்ற இனவன்முறைக்கு எதிராக துணிந்து செயற்பட்ட கண்ணனைக் குறிக்கிறது.

ஆடி மழையும் ஊமை வெய்யிலும்

முற்றத்து வாழைகளை கிழித்த காற்று
வீடு புகுந்து அலசுகிறது
துயரத்தின் துயரங்களை

சுருங்கிய முலையை பாற்பற்களால்
பற்றியிழுத்திடும் குழந்தையின்
கண்களை நிரப்புகிறது
கூரைவழி ஒழுகும் மழைநீர்க் குவளைகள்

ஆகாயத்திலிருந்து பூமிவரை
வயலின் கம்பிகளை இணைத்து
மழை மீட்டுகிறது
துயரம் நிறைந்த தாயின்
தாலாட்டு இசையை

ஆடி மழைக்காற்றில் அரும்பொடிந்த
தேயிலை மரங்களாய்
வெய்யிலை எதிர்நோக்கி நிற்கும்
கூனல் பொம்மைகள்

அதோ! தேர்தல் மேகங்கள்
கொண்டுவருகின்றன
ஊமை வெய்யிலின்
ஈரம் காயாத கண்ணீரை

சுமதியின் எஜமானியின் நேர அட்டவணை

சுமதி பாத்திரங்களைத் தேய்க்கிறாள்
காதில் விழுகிறது அலார மணியொலி
அதிகாலை நான்கு,
புரண்டு படுக்கிறாள் எஜமானி

சுமதி துணிகளை அடித்துத் துவைக்கிறாள்
மணி அதிகாலை ஆறு
எஜமானி தன் கணவனைத் தழுவிக் கிடக்கிறாள்

சுமதி விறகு உடைக்கிறாள்
மணி காலை எட்டு
தொலைக்காட்சியில் பாடலை ரசித்தப்படி
படுக்கைத் தேனீரை அருந்துகிறாள் எஜமானி:

சுமதி முற்றத்தைக் கூட்டி
நாய்க்கூட்டைக் கழுவி
பூந்தோட்டத்திற்கு தண்ணீர் பாய்ச்சுகிறாள்
மணி பத்தை தாண்டுகிறது
குளித்துவிட்டு சாப்பாட்டு மேசையில்
அமர்கிறாள் எஜமானி

சுமதி வேலைகளை முடித்து
காலை உணவை கையில் எடுக்கிறாள்
முன்னே வந்து அமர்கிறது
அவளது வீட்டு நாய்

• சுமதி, வீட்டு வேலைக்கு அமர்த்தப்பட்டு கொலைசெய்யப்பட்ட சிறுமியின் குறியீடாக ஒலிக்கிறது.

விசாரணை

புலியா நீ? இல்லை!
பயங்கரவாதிகளுடன் உனக்கு
சம்பந்தம் உண்டா? இல்லை!
ஆயுதம் ஏந்தியிருக்கிறாயா? இல்லை!
பதுங்கு குழிகள் பற்றித் தெரியுமா?
அதை நீ பார்த்திருக்கிறாயா? இல்லை, இல்லை!
எப்போதாவது அவர்களுக்கு உதவியதுண்டா? இல்லை1
இறந்த மூன்றுப்பிள்ளைகளைத் தழுவியவாறு காலொன்று
துண்டித்து கிடக்கும் ஆண் உனது கணவனா? ஆம்.!

ஜேம்ஸ் டெய்லரின் கல்லறையிலிருந்து

ஜேம்ஸ் டெய்லரின் அருங்காட்சியகம்
போய்த் திரும்பினேன்
பிரமிக்கச் செய்தது பிரித்தானியனின் திட்டம்
கண்ணுக்கெட்டிய தூரம்வரை
தேயிலைப் படர்ந்த கடல்வெளி!
மலையின் வழியே முடிவின்றி வளைந்து செல்லும் பாதையையும்
மலையைக் குடைந்து செல்லும் ரயில் தண்டவாளங்களையும்
பேருந்தில் கடக்கும் போது கண்டு அசந்து போனேன்
அவனது அபிவிருத்தியை நினைத்து!
வீட்டு முற்றத்திற்கு முன் வந்து
நிமிர்ந்து பார்த்து அதிர்ச்சியுற்றேன்
இருநூறு வருடங்களாக அசையாமல் நிற்கும்
லயத்தைப் பார்த்து

வீடு என்னைப் பூட்டிவைக்கிறது

ரம்மியமான பொழுதுகளை வெளியேற்றி
வீடு என்னை பூட்டிவைக்கிறது
உள்ளே
சுவரில் ஊர்ந்திடும் பல்லி மட்டுமே
மீட்டு மீட்டுப் பார்க்கிறது,
வீட்டின் இறந்தகால இன்பொழுதுகளை.
சமையலறை நொடிகளை
நுகர்ந்தப்படி இன்பிக்கிறோம்
நானும் கரப்பான் பூச்சியும் (மட்டும்).
எங்கள் உறவினர்களை முடக்கிவிட்டு
நிகழ்காலமனைத்தையும்
மெல்லத் தின்றுக்கொண்டிருக்கின்றன
கணினித் திரைகள்.
காலம் வீட்டை
அந்தரத்தில் மாட்டித் தொங்கவிட்டிருக்கிறது.
சிந்திக்கிற போது
சில நேரங்களில்
வீடு வெளியாகவும், வெளி வீடாகவும்
மாறி மாறிச் சுழலும் படங்கள் போல்
காட்சியளிக்கின்றன

மஞ்சள் மூக்குப் பறவை

பச்சையரும்பைக் கிழித்து வானேறுகிறது.
மஞ்சள் மூக்குப் பறவை.
அது துயரங்களை அள்ளிச் செல்லும்
அமுக்கக் காற்றில் சிறகை உந்திப்
பறக்கிறது

தன் கூரிய கால் நகங்களால்
காற்றில் வரைகிறது.
மலையொரு போராட்டம்,
அதுவொரு கடும்பயணமென்று.

வான்பாதை கடந்து
முகிலினூடாக நுழைகையில்
சூரிய விழிப்பொத்துப் பாய்கிறது கதிரொளி.

நீரின்மேல் எழுதுகிறான் நம் தலைவன்

பறத்தல் துறந்த டோடோ பறவைகளைப் போல்
அழிந்துக் கொண்டிருக்கிறது நமது இனம்

நீரின் மீது அமர்ந்துக்கொண்டு
எல்லோரது தலையெழுத்துக்களையும்
எழுதிக்கொண்டிருக்கிறான் நம் தலைவன்
நமது உழைப்பின் அந்தரங்கத்தையெல்லாம்
அவன் தேயிலை வடியைப்போல்
பிழிந்துக் கொண்டிருக்கிறான்

அவன் அறிவதில்லை
வெடித்து பிளந்துக் கிடக்கும் பாதங்களை
காப்புக் காய்த்த கரங்களை
புடைத்து முதிர்ந்து போன
பெண்களின் முகங்களை
வரண்டு தட்டையான அவர்களின் மார்புகளை
வேடிக்கை மேல் வேடிக்கையாகச்
சரிகிறது நம் வாழ்க்கை.

எல்லாவற்றையும் அவதானிக்கும்
பகலாந்தையாய் போயினர் நம் முன்னோர்கள்
பொய்களின் மேல் பொய்களாய்
நிச்சயிக்கப்பட்டுக் கொண்டே போகும்
நம் வாழ்வு!
ஒரு கழுகுக்கூட்டமாய் அல்லது
ஒரு சிறுத்தைக் கூட்டமாய்
நாம் மாறாதவரை.

அறுவடைக் காலம்

ஒரு முறை எம் நிலங்களில்
பசுமையைப் பாலையாக்கி
என் மக்களை அரித்துப்போன
விதைகளாக்கிப் போனாய் நீ

முறிந்து போன மனதை
மலையாய்த் திடமாக்கி
வியர்வையை ஓடையாக்கி
பொன்விளையும் வெளியாக்கினோம்

இப்போது நீயும் உனது குழுவும்
கதிர் கொய்யும் கிளிகளாய் நீண்ட கரங்களுடனும்
இரவில் வேலியை முறித்துக்கொண்டுவரும் பன்றிகளாய்
பிளந்த மூக்குடனும்
வருக! அறுவடைக்காக வருக!

எதிரொலிப்பு

வீட்டின் முன்னுள்ள மரத்தில்
விட்டு விட்டு ஒலிக்கிறது
ஒரு சோடி பறவையின் குரல்
குரல் வந்த திசைத்தேடிப் பார்த்தேன்
பறவைச்சோடி மறைந்து போயிருக்க
அதன் சத்தம் மட்டும்
எதிரொலித்துக் கொண்டிருந்தது.
இலைகளிலும்
மரப்பட்டைகளிலும்
மலர்ந்திருந்த பூவின் துவாரங்களிலும்

கடவுளின் தரிசனம்

வாழ்நாளில் உனை தரிசிக்க
தவம் கிடந்த பயனை நீ அளித்துவிட்டாய்
எனையாளும் கடவுளே! ஆத்மாவே!
நீ புன்னகைக்கும்போதெல்லாம்
புதைகுழிகள் மலர்ந்தன இம்மண்ணில்
என் மக்களை சொர்க்காபுரிக்கு
அழைத்துச் செல்லாவிட்டாலும்
வாழுங் காலத்திலேயே நரகத்தைக் காண்பித்தாய்!
உனது வல்லமைக்கு நிகர் யார்?
நாவில் அலகு குத்தி வழிபட்டவனை
கழுவேற்ற அனுமதி வழங்கிய அதி அற்புதன் நீ
இந்த பக்தனின் மொழியையே இனிமையாக்கி
நீயளித்த போதனையால்
ஐ.நா.வே சமாதிநிலை ஞானத்திற்கு வந்துவிட்டது
ஆண்டவனே!
“இங்கு உன்னை யான் பெற
என்ன தவம் பண்ணினேனோ?“

என்னருமைக் காதலி மாம்பழ அழகி

என்னருமைக் காதலியே என் தாயானவளே!
உன் பருத்தி மடியில் தவழ்ந்து,
உனது முலைப்பாலை பருகி வளர்ந்தவன் நான்
இன்று உனது பருவத முலைகளைப் பிழிந்து விற்கிறார்கள்
தெற்கின் மைந்தர்கள்.
உன்னை விபச்சாரத்திற்கு தயார்படுத்துகிறான்
என் முன்னையவன்.
அமெரிக்கன், இந்தியன், சீனன் என்று வரிசைகட்டி நிற்கிறான்
உன் அங்கங்களைக் குதறி அனுபவிக்க;
அவ்வளவு வெறி அவனுக்கு!
உனது பொன்நிற மேனியின் வனப்பையும்
வெண்ணிற கூந்தலின் எழிலையும்
வர்ணித்துப்பாடிய எனது இளமைக்
காதல் பாடல்கள் உனது சிதைந்த கோலத்தால்
உயிர் இழந்து விட்டன
அவை பெற முடியாப் பாடல்களாகவிட்டன
நீ உதிரம் பிழிந்து உயிரை வழங்கியவள்
தரகு வேலை பார்க்கிறான் உன்னை விற்க
என் ஆயுள் காதலியே, மண்ணின் தாயே
வென்றெடுப்பேன் உன்னை வெகுவாக.

இறந்த தந்தையின் நாட்குறிப்பிலிருந்து...

உனது இறப்புச் செய்தி செவிப்பறை
நரம்புகளை அழுத்திய பொழுது
பச்சையம் செத்த புல்லாய்
மேசை மீது மடிந்து போனேன்

சூரியனைத் தொலைத்த பொழுதுகளை
விழுங்கிப் புத்தகத்தில் மேய்கிறது
இளமை

மாமர நிழலில் அணில்கள்
பழத்தைச் சுவைத்த பொழுதுகளில்
எனது குழந்தைப் பருவம் உன்னிற்
சரிந்துகிடந்தது

"என் ஆவி உடல் பந்திலிருந்து
சுருங்கும் வேளை
தானியக் களஞ்சியத்திலிருந்து ஆயுதக்
களஞ்சியத்திற்குள்
ஓடித்திரியும் எலியைப்போல்
உலகம் உன்னில் சுழலும்
நீ எழுதி வைத்த வரிகளின் நிதர்சனம்
அற்புதமானது

வறுமை குரல்வளையைக்
காவுகொள்ளும் பொழுதொன்றில்
எனது சிறிய விரல்களைப் பிடித்து
நதியைப் பாதையாகக் காட்டிய
வழியை கால்கள் நனைத்துக்
கொண்டன.
புலியின் நகமொன்றை கழுத்து
மாலையாக
அணிவித்து இறந்து போனாய்

நிமிர்ந்த மலையொன்றையும்
வளைந்த வானவில்லையும் நோக்கி
எழுத்துக்களை காற்றில்
மிதக்கவிடுகிறேன் உனது ஆத்ம
திருப்திக்காக"

மரித்த தந்தையின்
மூன்றாவது பொழுதொன்றில்
வாசித்த நாட்குறிப்பை மூடிவிட்டு
மண்ணில் விளையாடும் மகனின்
வெளிதனை நோக்குகிறேன் நான்

காதல் கரைந்து காலிமுகத் திடல்

உனது மென்மையான கரங்களை ஞாபகமூட்டுகிறது,
நெற்றியை தடவிச்செல்லும் குளிர்ந்த காற்று.
கரைதொட்டுப் போகும் அலைகளை எண்ணியபடி
வெறுமையில் அமர்ந்திருக்கிறேன் ஒரு கல்லின் மீது.
கழுவிச் செல்லும் கடல் நீரை ஊடறுத்து
அன்று நாம் இணையாக விளையாடிய
மணலடித் தடங்களை தேடுகிறேன்.
சிறுகச் சிறுகச் சேறும்
கரையோர மணல் திட்டுகளைப்போல்
கரையும் எனது கண்ணீர்த் துகள்கள்
கடலை மேலும் மேலும் கரிக்கச்செய்கின்றன.
கிழிந்து கிடக்கும் சிவப்பேறிய
கடலடி வான் முகில்கள் கொண்டு வருகின்றன.
சோதனைச் சாவடியில் கறையேறிக் கிடந்த
உனது ஆடைகளின் துயரங்களை

- போர்காலத்தில் பாலியல் வன்முறைக்குட்படுத்தப்பட்டு சோதனைச் சாவடிகளில் கிடந்த பெண்கள் குறித்தது.

டார்வினின் பூனைகள்

டார்வினின் பூனைகள் விசித்திரமானவை
வலிய உடலையுடைய வெள்ளையொன்று
மெலிந்த எலும்பாலான கறுத்தது மற்றையது.
வெள்ளையின் சீண்டல்கள் கறுப்பை தொடர்ந்த வண்ணமிருக்கும்
எந்நேரமும்
மீன் முழுதும் உண்டு செதில்களை மிச்சம் வைப்பதும்
பால் முழுதையும் பருகியுறங்குவதும் அதன் சுகபோகம்.

வெறும் பாத்திரத்தை நக்கி பிழைத்திடும்
வாழ்வு எளிய கறுப்பிற்கு

ஓய்வுப் பொழுதுகளில் விளையாடிச் சீண்டுவதும்
உறங்கும் பொழுதுகளைப் பிராண்டி களிப்பதுமாக
தொடர்ந்தது வெள்ளை.

மிலேச்சத்தனத்தின் மதில்களை மீறிய எளிய கறுப்பு
பாய்ந்து பாந்தாடிப் பிராண்டித் தள்ளியது
வலிய வெள்ளையை.
பாலில் அரைவாசியையும், மீனின் உடல் பாதியையும் உண்டு
குடித்துவிட்டு மீசையை உரசி
மியாவ் என்றது வலியதைப் பார்த்து.

டார்வின் திகைத்து போனார்

பருவம் கொத்திப்போகும் பறவை

சாளரக் கண்ணாடிகளை உடைத்து விழுகிறது
முற்றத்தில் ஒலிக்கும் பறவையின் குரல்.
அதன் கூவலில் நனைகிறது வீடு.
அது எங்கள் அறுவடை பருவத்தைக் கொத்திப்போக
காத்திருக்கிறது.
ஒரு காய்ந்த விளிம்பில் ஏகியவாறு,
புதிய கருக்கள் முளைவிடும்
பருவத்தைப் பார்த்து நிற்கிறது
முட்டைகளைக் கவர்ந்து செல்ல.
முன்பொரு தடவை அது எங்கள் வசந்த காலத்தை
கொத்திச் சென்றது.
இப்போது
கால்களை மடக்கி, புருவத்தை உயர்த்தி
அலகை நிமிர்த்தி பார்த்துக் கொண்டிருக்கிறது
மீண்டும் இளவேனிலை கொத்திச் செல்ல.

ஜேம்ஸ் பெக்கருக்கு ஒரு கடிதம்

வருகிறார் இந் நூற்றாண்டின் சகுனி,
இதோ விரிகிறது இன்னொரு மாபாரதம்.
உருளுகிறது மீண்டும் தாயக்கட்டை,
அவிழ்கிறது நம் துரோபதைகளின் சேலை,
அவரது கட்டளைகளில்

சகுனி மாமா
ஐரோப்பாவில் உருவும் சேலைகளுக்கு
பஞ்சமா என்ன?
அல்லது எங்கள் துரோணர்கள்,
கண்ணகி கதைகளை
உங்களுக்குச் சொல்லவில்லையா?

மாபெரும் அரசவையில் தாயத்தை உருட்டி
மாற்றிவிட்டீர் பாண்டவர்களையும்
கெசினோவின் மாமாக்களாய்

அவர்கள் ஊர்தோறும்
உலங்கு வானூர்தியில் அலைகிறார்கள்
மாதவி படலத்தை எழுதுவதற்காக

காற்றில் வரும் கீதம்

தேயிலைக் கடலின்
உயர் பசுங்கிளையில்
ஊர்க்குருவியின் அலகிலிருந்து
அவிழ்ந்து விழுகிறது
செவியை நிறைத்திடும் தேனருவி
இசைஞானியின் வயலின் வருடல்.

அலையில் தெறிக்கும் விம்பம்

அவுஸ்திரேலியாவைச் சேர்ந்த
அந்த நடுத்தர வயது குடும்பப் பெண்
சமையற்கட்டில் மீனை நறுக்கும்போது
அதன் வயிற்றிலிருந்து அகப்பட்டது
பெரிதும் சிறிதுமாக உள்ளடங்கிய சிறிய சாவிக்கொத்தொன்று
உடனே விரைந்தாள் சாவிக்கொத்துடன் மீன்சந்தைக்கு
சாவியில் பொறித்திருத்திருந்த எழுத்துக்களையோ
சொற்களையோ அறியாத அவன்
அதனைக் கொண்டு சென்றான்
நாளாந்தம் கடலில் அலையும் படகுக்காரனிடம்

ஒரு மாலைப் பொழுது
சூரியன் கடலில் முகம் பார்த்துக்கொண்டிருந்தான்
கரையில் அமர்ந்தான் படகுக்காரன்
ஈழத்தின் பூட்டப்பட்ட வீட்டுருவம்
அலைவிம்பத்தில் பட்டு தெறித்து
புரண்டு புரண்டு வந்தது அவனருகில்
அப்போது சாவியில் பொறித்திருந்த தமிழ் எழுத்துக்களை
மெல்ல உச்சரிக்கலானான் அவன்

வண்ணாத்தியின் கண்கள்

லயிக்கக்கூடியவை வண்ணாத்திகளின் சிறகுகள்.
மென்மையின் மகரந்தங்களை அணிந்திடும்
அவை என்றும் உயரப்பறப்பதில்லை,
பறத்தலின் வியூகங்களையும் அவையறிந்திருப்பதில்லை.
அமர்ந்து அமர்ந்து பறப்பதையே விரும்பும்
அவை வண்ணமான பூக்களின்
மிருதுவான இதழ்களிடம் எப்போதும் தோற்றுக்கொண்டிருக்கும்.
யாத்திரைக் காலத்தில் மாத்திரம்
கூடிப்பறக்கும் அவற்றிடம்
ஆன்மீகத்தின் விளிம்புகளே சிறகாகிக்கொண்டிருக்கும்
கரடு முரடான பாதைவழியில் பயணிக்காத அவை
வெய்யிலின் இளஞ்சூட்டில் உலர்ந்து திரிவது போல
மழையம்புகளை ஊடுருவி வென்றதில்லை
பரந்த சமுத்திரங்களையும் அவை கடந்ததில்லை.

நிமிர்வு

மண்பாதை நடுவே
கம்பீரமாகத் தலையை நிமிர்த்தி
நிற்கிறது புல்
எத்தனையாவது தடவை
யாருடைய பாதணியால்
மிதிப்படப்போகிறோம் என்பதைத்
துளியும் எண்ணாது.

உனது கடைசிப் பயணம்

உனது கடைசிப் பயணம்
பூக்களால் அலங்கரிக்கப்படவில்லை
தோரணங்கள் தொங்கிக்கொண்டிருக்கவில்லை
வாசனைத் திரவியங்களால்
குளிர்விக்கப்படவில்லை
வாகன அணிவகுப்புகளால்
முன்னெடுக்கப்படவில்லை
காயும் ஈக்களாலும்
அழுக்கின் வாசனையாலும்
உன்னுடல் போர்த்தப்பட்டிருந்தது
காற்றுடன் கலந்த
ஒப்பாரி ராகங்கள் மட்டுமே
உனது பயணத்துக்கு இசையூட்டின
உனது கடைசிப் பயணம்
பூக்களால் அலங்கரிக்கப்படவில்லை

இரவில் பேசிக்கொள்ளும் மலைகள்

எனக்கு
அறிவு தெரிந்த நாளிலிருந்து
இம் மலைகள் இரண்டும்
இப்படியேதான் நின்று கொண்டிருக்கின்றன
ஒன்றையொன்று முறைப்பது போலவும்
எதிரிக்கு எதிரியாய் நிற்பது போலவும்
போர் தொடுப்பது போலவும்

மக்களுக்கு நிழல் அளிப்பதற்காகவே
காலங்காலமாய் நிற்பதாக
பழையவர்கள் கூறுகிறார்கள்.

அவர்களுக்குத் தெரியாமல்
அவை இரவில் பேசிக்கொள்கின்றன.

இரும்புத்திரையும் சம்மட்டியும்

இருளடர்ந்த லய அறைகளில்
நீ எங்களைப் பூட்டி வைக்கலாம்
ஒளியைப் பார்க்கவும் புகையைப் போக்கவும்
சிறிய ஜன்னலை வைக்கலாம்
ஆயினும் நாங்கள் உடைத்தெறிவோம்
உனது முள் மதிலரண்களை

தேயிலை நிரம்பிய மலை முடுக்குகளில்
எங்களை மேயவிடலாம்
அரும்புகளின் அரைவாசியைக்கூட விழுங்கிடலாம்
ஆனாலும் நாம் சூரியனைத் தொடும் நாள்
வெகு தொலைவிலில்லை

நிலப் பசுமையை மஞ்சள் வெளியாக்கலாம்
வெண்ணிற நதிகளை
உமது கமண்டலத்துள் அடைக்கலாம்.
எமது உணவையும் பானத்தையும்
நீயே தீர்மானிக்கலாம்
எனினும் எமது நிலத்தை நாமே உழும் நாள்வரும்

எங்கள் கைகளைக் கட்டி வைக்கலாம்
கால்களை முடக்கி விடலாம்
குரல்வளைகளை நெரித்துக் கட்டலாம்
உமது வளைந்த ஆயுதத்தின் முன்
எமது கூரான ஆயுதம் உரசிடும் நாள் தொலைவிலில்லை.

துப்பாக்கியின் நிழல்

வெய்யில் எரித்திடும் ஜூலை நாளொன்றில்தான்
பெரும் துப்பாக்கியின் நிழல்
எம் மார்புகளில் விழுந்தது.
அப்போது ஓய்வதற்கு பதிலாக ஓடத்தொடங்கினோம்.
நிழலுக்கு பயந்தோடும் முதலாவது சந்தர்ப்பம் அதுதான்.
விட்டு விட்டுத் துரத்தும் அதன்நிழல்
என்றுமே அபயமளித்ததில்லை
வடக்கே தலைவைத்துப் படுக்கும்போது
அதன் நிழல் எம் தலையைத் திண்கிறது.
நரம்புகளில் உணர்வு கொதித்திடும் பொழுதெல்லாம்.
துப்பாக்கியின் நிழற் கதிர்கள்
எம்மை குடித்திருக்கின்றன.
மலைகளின் பெரும் நிழலை ஊடுருவி
அதன் நிழல் எம்மை மேய்ந்திருக்கிறது.
இப்போது பெரும் ஊழிக்கூத்தில்
நிழல் மரங்கள் அழிக்கப்பட்டு
எம்மைச் சூழத் துப்பாக்கிகள் நடப்பட்டுள்ளன
அவை வளர்ந்து நிழல் தருமாம்.

வடக்கிலிருந்து வரும் பறவை

நீலவானைத் தொடுவதுபோல் வருகிறது
காற்றைக் கிழிக்கும் வெண்ணிறப்பறவை
அதன் மென்மையான இறகொன்றை
உதிர்க்கிறது அந்தர வெளிதனில்
உயர்ந்த மலைவெளிகளிடையே
காற்றில் நெளிந்து நெளிந்து
நடனம் பயின்று வரும் இறகு
என் கைகளில் அகப்பட்டது
தொலைவில் மறையும் பறவையினை
நோக்கின விழிகள்
குரதியில் நனைந்த அதன் இறகைத் தடவியபடி.

அரும்பின் வலி

மழைநாளில் நிறுத்துவிட்டு வீடு வந்தவள்
அடுப்படி அனலருகே அமர்கிறாள்
உயர உயரச் சுடரேறும்
மஞ்சள் நெருப்பில் மையோட்டமாய்
வந்து வந்து போகிறது
கங்காணியின் மீசை.
தலைமுறை தலைமுறையாக பெண்களின்
முதல் எதிரி தூக்குத்தராசு.
நிறுத்த பெண்கள் சிரித்த முகத்துடன்
வீடு செல்லும் நாளைத் தேடுகிறாள்
கொழுந்துவிடும் செந்நெருப்பில்.

முள்ளந்தண்டிலிகள்

I

நீரில் வாழ்பவை, நிலத்தில் வாழ்பவை
எப்போதும் ஆபத்தானது
நீரிலும் நிலத்திலும் வாழ்வது

II

முள்ளந்தண்டுள்ள பிராணிகளில்
மனிதன் வலிமையான விலங்கு
நிமிர்ந்து நடப்பது,
வளைந்து கொடுக்காதது
உறுதியாய் நிற்பது

III

எனக்குத் தாருங்கள்
தற்கொலைக் குண்டென்றும்
சயனைட் குப்பியென்றும்
எங்களில் ஒருவனிருக்கிறான்
முள்ளந்தண்டிருந்தும் வளைந்து நடப்பவன்

IV

இயற்கையைச் சமனிலையாக
வைத்திருப்போம்

இசையில் விடிந்த இரவு

கவ்விய இருளை விலாச ஆரம்பித்தான்
கால்களை மடித்தமர்ந்த கோடாங்கி
மங்கி கிடந்த தனது பழம்பாடலை
உரத்துப்பாடி ஞாபகமூட்டினான்
தூசுப்படிந்திருந்த உடுக்குத்தோலை
அடித்து வாசித்து, தன் விரல்களால்
எழுப்பினான் உயிரிசையை
முன்னே தலைவிரித்து அமர்ந்திருந்தவள்
காதுச்சவ்வுகளை உரசிய உடுக்கிசையில்
நெளிந்தாள்
உதிர இடுக்குகளை பிளிந்த இசையால் அதிர்ந்தது நாடி
ஆடினாள், பாடினாள், உரத்து குரலிட்டாள்
உச்ச ஸ்தாயில் ஒலித்த இசையால்
வியர்த்து மயங்கி விழுந்தாள்
பின் பிரம்மையில் தெளிந்தாள்
விடிந்தது

கிழக்குச் சரணாலயமும் தென்கிழக்குப் பறவைகளும்

கிழக்கின் கரையிலேயே சுற்றித்திரியும்
தென்கிழக்கு வெண்தலைப் பறவைகள் அவை
கிழக்கு கொக்குகளுடன் இணைந்து
பறக்கும் வேளைகளில்
நாரையெது கொக்கெது என்று
ஒருவரும் அறியார்
அவை கொக்கின் நிழலில் வாழும் நாரைகளாகவே
பறந்தன
அவற்றின் சரணாலயம் தென்கிழக்காகவும்
சிலவேளை கிழக்காகவும் இருந்தது
ஓடுமீன் ஓடி உறுமீன் வந்தபோது
கிழக்கு கரையில் அவற்றை
கொத்திச் சென்றன நாரைகள்

யானை முடியும் சீன வியாபாரியும்

சீன தேச அரசனைக் காணச்சென்றான்
ஈழக்குடிமகனொருவன்
இருவரும் தேநீர் அருந்தும் பொழுது
அவனது விரல் மோதிரத்தின் யானைமுடியை
அடைய நினைத்த அரசன்,
முடிக்காக யானையையும்
யானைக்காக அது குளிக்கும் நதியையும்,
ஒதுங்கி நிற்கும் மரத்தையும்
மரத்திற்காகக் காட்டையும்
காட்டிற்காக நிலத்தையும்
நிலத்திற்காக ஊரையும்
ஊரிற்காக நாட்டையும்
முழுத்தீவையும் பெற வேண்டியதாயிற்று.

கானல் காற்று

கரும்புகை அந்தர வெளியில்
மறைவதுபோல்
இடியின் முழக்கம் செவியில்
நுழைந்து கரைவதுபோல்
பறவைகளின் கீச்சொலி
காற்றில் கலந்து
காணாமற் போவதுபோல்
மீன்கொத்தியின் கால் தடம்
நீரில் அழிவதுபோல்
எங்கள் பகலுழைப்பு அஸ்தமிக்கிறது.

இளங் கிழவி

அவள்தான் எங்களில் மூப்பு;
படர்ந்த இம்மலை விரித்துவிட்ட
வாழ்வின் சகலமும் அடைந்தவள்
எட்டு வயதில் கூடை சுமந்து
பதின்மூன்றில் குழந்தை சுமந்து
இருப்பத்தொன்பதில் பேரப்பிள்ளை கண்டவள்

நீண்ட செம்பட்டைநிறக் கூந்தல்
நெற்றியில் சுருங்கிய பல மடிப்புகள்
குழிவிழுந்த கண்களை உடைய அவள்தான் எங்களில் மூப்பு

இளம் மூக்கில் பெரும் மூக்குத்தி அணிந்து மின்னுபவளும்
ரவிக்கையின் கரைகளுக்குக்கீழ் கருமைபடர்ந்த
கைகளுடையவளும், வெற்றிலைச் சிவப்பால்
பற்களை பழைமையாக்கிக் கொண்டவளும் அவள்தான்.
எங்கள் மத்தியில் அவள்தான் மூப்பு

குழந்தை பெறுவதிலும்
கொழுந்து கொய்வதிலும், நிறுப்பதிலும்
“பொலி” சொல்லுவதிலும் “கும்மி” கொட்டுவதிலும்
அனுபவம் கொண்டவள் அவள்தான்.
இளமையில் முதுமையை எட்டிப்
பிடித்தவளும் அவள்தான்.

அக்கினிப் பிரவேசம்

நரம்புகளில் எரிகிறது உணர்வு,
சிவக்கிறது குருதி தசைகளில்,
புலன்களில் விரிகிறது இசை,
காற்றாக, ஸ்வரமாக, தாளமாக அதிர்கிறது.
பொங்கியது மனம்,
ஒருங்கமையும் இதழ்கள்,
விடுதலையாகப் பெய்கிறது மழை.

அமைதியாய்த் தூங்கு

நீ அமைதியாய்த் தூங்கு
ஒரு குழந்தையைப்போல,
நமது நகரங்களைப் பனி வந்து மூடுகிறது
ஆனாலும் நீ தூங்கு ஒன்றும் அறியாததுபோல்,
நம் வீட்டு முற்றங்களை
பெரும் புயல் முற்றுகையிட்டுள்ளது
புல்லைத் தின்னும் ஒரு முயலைப்போல,
கண்களை மூடி நீ தூங்கு.
பொன்மணிகள் சுடரும் உனது வயலைப் பார்த்தாயா?
அவை அநாதை முகங்களை சூடியிருக்கின்றன.
உனது உறக்கமே இங்கு வேண்டப்படுகிறது.
ஆதலால் நீ தூங்கு, நீ தூங்கு
அமைதியாய்த் தூங்கு.

எதிர்க்கப் பழகு

எதிர்க்கப்பழகு அடிமையே எதிர்க்கப்பழகு
எதிர்கும்போதுதான் உனதுடலில்
உதிரம் ஓடுகிறது; அது சூடேறுகிறது
எழுச்சி பிறக்கிறது, நரம்பு நிமிர்கிறது
தோள் வலிமையாகிறது.
மீண்டும் மீண்டும் நீ தலை குனியும் போது
சோர்வு தவழுகிறது, கழுத்து மடிகிறது.
முஷ்டி பதுங்குகிறது, இடுப்பு வளைகிறது
கால்கள் நொண்டும், வார்த்தை தடுமாறும்
ஆதலால் எதிர்க்கப்பழகு
அடிமையே எதிக்கப்பழகு
வன்முறை வேலிகளைக் கடந்து
எதிர்த்துப்பார்
கண்கள் விரியும், கருத்து தெளியும்
அடிகள் நிலையூன்றும் மானுடம் மலரும்

அடையாளம்

எனது இடது கையின் எலும்புகளையுருவி
உனது கைகளை நீளமாக்கிக் கொள்
அது உனது அற்புதத்தில் ஒன்று.

சவரம் செய்த உனது முகத்தில்
எனது வலிந்த மீசையைப் பிடுங்கி ஒட்டிக்கொள்
அது உனது பலத்தின் வெளிப்பாடு.

எனது தேவதைகளையெல்லாம்
உனது பூஜையறையின் கடவுளாக்கிக் கொள்
அது உனது அழகின் நிலைப்பாடு.

எனது நகரங்களின் சமிக்ஞைகளை
உன்னில் புனிதமாக்கு
அது உனது அபகரிப்பின் பண்பாடு.

மிகவும் உரமாக விழும்
எனது வார்த்தைகளை
உனது சுலோகங்களில் கோர்த்துவிடு
அது உனது அழிவிற்கான
முதலாவது அடியெடுப்பு.

எஜமானின் ரசனைக் குறிப்பு

சேற்று மருதாணி பூசிய உன் விரல்களை
ரசிக்கிறேன் நான்
உன் முகம் பிரசவிக்கும்
வியர்வை மணிகளை
மிக மிக ரசிக்கிறேன்.
நீ உடல் கசக்கி
வல்லாயுதம் கொண்டு மீட்டிடும் இசையை
அதனிலும் ரசிக்கிறேன்.

தீயை விற்க முடியுமா உன்னால்?

உன்னால் விற்க முடிகிறது
இறகு விரிக்கும் பறவையின் காற்றையும்
பூக்களையும், இலைகளையும் இன்னும் பல செடிகளையும்,

நீ விற்கிறாய்
மீன் விளையாடும் குளங்களை,
சூரியனைத் துழாவிடும் மரங்களை,
பசு மேயும் புல்வெளிகளை,

நீயறிவதில்லை சூழ்ந்து நிற்கும் மலைகள்
எம் மூதாதையரின் சிரசுகளென்று
நதிகள் அவர்களின் குருதியிலும் பழைமையானவையென்று

நீ விற்கும் எல்லாமும் உன்னுடையவையுந்தான்:
அவை என்னுடையதும்தான்
அவை நம்முடையவை: மக்களுடையவை

எல்லாவற்றையும் விற்கிறாய்!
எப்போதாவது அவர்கள் தோற்றுவிக்கும்
புயலை உன்னால் விற்கமுடியுமா?
கட்டுக்கடங்காது வரும் வெள்ளத்தை
உன்னால் விற்கமுடியுமா?

முடியுமா
அவர்கள் பரப்பிவிடும் தீயை விற்க
உன்னால் முடியுமா?

- இக்கவிதை கவிஞர் சிவசேகரத்தால் Can you sell the flame என்ற தலைப்பில் ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்டது.

நம் தேசம் பாடல்களால் ஆனது

ஒருவர் பின் ஒருவராகத் தலையில் சுமைகளுடன்
முதுகில் குழந்தைகளைக்
கட்டித் தொங்கவிட்டுக் கொண்டு
கடலிலிருந்து கானகத்தைக் கடக்கும் போது
நீ பாடிய பாடல்கள் எங்கே?

பழம் பறிக்கும்போதும் அவற்றை இடிக்கும் போதும்
அரும்பொடிக்கும்போதும் அவற்றைச் சலிக்கும்போதும்
கூட்டாக இணைந்து நீ பாடிய
அந்தப் பாடல்களின் ராகங்களால்
உருவானவைதான் நம் உறவுகள்.

காடுகளை அழிக்கும்போதும் கூனிகளை அடிக்கும்போதும்
கவ்வாத்து வெட்டும்போதும் முள்ளுக் குத்தும்போதும்
நீ பாடிய உறுதிவாய்ந்த பாடல் வரிகளால்
ஊன்றப்பட்டதுதான் நம் தேசம்.

உயர்ந்த *‘வறக்கட்டுகளில்’ கூடைகளைச் சுமையேற்றி
தட்டுத்தடுமாறி முக்கி நடந்து
தாளமிட்டு நீ பாடிய அந்தப் பாடல்கள் தான்
மலைவெளிகள்தோறும் மோதி உலாவுகின்றன.

சந்ததிக்கு சந்ததி
நீண்ட லயன் வரிசைகளில்
ஆனந்தமாய் நீ பாடிய பாடல்களில்தான்
வாழ்வின் இரகசியம் புதைந்திருந்தது.

---

* வறக்கட்டு – மலைப்பகுதிகளில் சரிவாக இருக்கும் இடம்.

நூற்றாண்டு கால இளமை

தேய்ந்து முதிர்ந்த பாறையின் நடுவே
முடிந்து வளர்ந்து நிற்கும்
புல்வெளிகளின் மத்தியில்
கூழாங்கற்களின் முணுமுணுப்புக்கிடையில்
இன்னும் இளமைத் துடிப்புடன் ஓடிக்கொண்டிருக்கின்றது
எனது ஊர் ஆறு

விருட்சங்களைச் சுமக்கும் பறவை

பழத்தை விழுங்கிய பறவை
பறந்து கொண்டிருக்கிறது
ஒன்பது விருட்சங்களையும்
அதன் கிளைகளில் அமர்ந்திருக்கும்
பல பறவைகளையும் சுமந்துகொண்டு

பொய்க்குதிரை

சமையல் பாத்திரங்களை
அடுப்படியிலிருந்து தூக்கி வைக்கவும்
சாப்பாட்டு மேசையை
துடைத்து சுத்தமாக்கவும்
மிளகாய்க் குவியலை
வெய்யிலில் உலர்த்தவும்
தொலைக்காட்சி வானொலி பெட்டிகளைத்
தூசு தட்டவும்
எனது பிள்ளை கழித்த சிறுநீரை
துடைக்கும் வேலைகளையும் செய்து கொண்டிருக்கிறது
முன்னால் பெரியாங் கங்காணியின்
பழைய கோட்டு

மேய்ச்சல் சங்கிலி

மண்ணின் தலையை
மேய்கின்றன புற்கள்.
புற்களின் தலையை
மாடு மேயும்.
மாட்டின் உடலை மேயும்
பறவையின் நிழல்.
வெய்யில் மேயும்
பறவையின் முதுகை
வெய்யிலை மேய்கிறது மண்.

தடை தாண்டல்

பாதை என்ன செய்யும்?
இந்தப் பாதை சரியில்லை என்றாலோ!
இதில் பயணிக்க முடியாதென்றாலோ!
பாதையால் என்ன செய்ய முடியும்?
பாதையென்றால்
கள்ளும் முள்ளும் நிறைந்துதான்
கரடும் முரடும் கொண்டதுதான்
பாதையென்ன செய்யும்
வழிப்போக்கனின் தூற்றலுக்கு

வெறிச்சோடிய முற்றம்

கனிந்த மாம்பழங்களின் வாசனை
காற்றோடு சேர்ந்து வட்டமிடுகிறது
எனது வீட்டு முற்றத்தில்
முகர்ந்து தடவி சுவைத்திட
எந்த நிறப் பறவைகளும் வந்தமர்வதில்லை
மார்கழிப் பருவமொன்றில் ஒலித்த
துப்பாக்கி வெடிச்சத்தத்தில்
அணில்களுடன் பறவையும் இடம்பெயர்ந்து விட்டதால்
வெறும் எறும்புகள் மட்டுமே
மாறி மாறி ஊர்வலம் நடத்துகின்றன.

நிவாரணம் என்ற சொல்லும் பொருளும்

முன்பொருநாள் புலர்ந்த காலையைச்
கழுவிக்கொண்டு போனது பெரிய அலை
அன்று கரையின் மீது
அலை அலையாய் புரண்டது எம் கண்ணீர்
மேற்கிலிருந்தும் கிழக்கிலிருந்தும்
நிவாரண அலைகள் திரண்டு வருவதைக் கேள்வியுற்று
அடிவான்வரை நீண்டன விழிகள்

மழையும் வெய்யிலும் கலந்த
நாளொன்றில் புதையுண்டன அறிவுயிர்கள்
எஞ்சியவை முள்வேலியில் அணிவகுத்து
அண்ணாந்து பார்த்த வேளை
வான்வெளியில் புயல்போல் தோன்றியதையும்
விட்டுவிட்டு வட்டமாய்ப் பறப்பதையும்
பறவைகள் நிவாரணக் காற்றில் கரைந்ததையும்
அறிந்தோம்

நிவாரணம் என்ற சொல்லின்
அர்த்தத்தைப் பல இடங்களில் புரட்டினோம்
"பொருள் இருந்தால்தான் சொல்
அர்த்தப்படும்" அறிஞர் கூற்று
சொல்லையும் பொருளையும்
மாறி மாறித் தேடிக்கொண்டு
கடவுளிடமே சென்றுவிட்டோம்

அப்போதுதான் இராட்சத மலையொன்று
இடிந்து விழுந்தது
கண்ணீர் விட்டுக் கதறியழுது
புரிந்து கொள்ள முயற்சித்தோம்
புரிந்துவிட்டது "நிவாரணம்" என்ற
சொல்லுக்குப் பொருள் அரசாங்கத்தின்
அகராதியில் மட்டுமே உள்ளதென்று

பிரமாண்டமான கொலை

மிகப்பிரமாண்டமாக கொன்றார்கள் அந்த மனிதனை
கொலை ஒப்பந்தக் காரர்கள்
முதலில் வாளால் அறுத்தார்கள்
கைகளையும் கால்களையும்
கோடரியால் துண்டு துண்டாய் வெட்டினார்கள்
மயிர்க் கற்றைகளை அழித்தொதுக்கினார்கள்
பின் முண்டத்தை சுமையூர்தியொன்றில் ஏற்றினார்கள்
பிறந்த மண்ணும்
வளர்த்த மக்களும்
வாயூற வகையற்றுப் பார்த்துக்கொண்டிருந்தார்கள்
அணிவகுத்துச் செல்லும்
அவனது பிண ஊர்வலத்தை

சாரலில் நனைந்த மண்

மலையின் துயரை பகிரப்பயணமானது
உனது பேனை
துயர் சித்திரங்களை "ஆய்வெனும்
ஏட்டில் வரைந்து
உண்டாக்கினாய் வெறும் சுவரை
அள்ளும் கைப்பிடியளவு மண்ணும்
நீ விசிய சாரலில் நனைந்ததுதான்
புரட்டு புரட்டென்று புரட்டினாய்
ஓய்ந்து போனது ஓலைச்சுவடி திணைக்களமும்
ஆய்வில் அடையாளமானது மலையகம்
"பினந்தின்னும் சாஸ்திரங்களை"
கிழித்துவிட்டு எழுதினாய்
புதிய அத்தியாயத்தை
இனிவரும் எழுத்தாளன் ஒவ்வொருவனும்
மண்ணை மிதிக்க முன்பு
உன்னை புரட்ட வேண்டும்
எங்கள் நூலடுக்குகளில்
நீ வாழ்ந்துக்கொண்டிருக்கிறாய்
தூசு படியாமல்

தலைகீழ் விம்பம்

காலடிக்கு கீழே படுத்துக் கிடக்கிறது தரை;
தரை ஏளனத்துடன் கை தட்டும் குளத்தை
குளம் நிலத்திடம் பிடிபட்டுக் கிடக்க
குளத்தில் சரணடைந்திருந்த மீன்களோ
விடுதலைக்குத் துடித்துக்கொண்டிருந்தன
நிமிர்ந்து பார்க்கும் மரங்களோ
தலைகீழாகத் தொங்கிக்கொண்டிருக்கின்றன
எல்லாவற்றுக்கும் கீழாக
நிலையற்று ஆடிக்கொண்டிருக்கிறது
தரையின் பங்களா

ஓவியம்

எத்தனை முறைத் தீட்டினாலும்
அழகு பெறுவதாயில்லை இவ்வோவியம்
புகை பிடித்த அறைகள்
கூரை நிறந்த கற்கள்
மெலிந்த மனிதர்கள்
என் ஓவியத்தின் உருவங்கள்,
எனது ஓவியம் அழகு பெறுவது
எப்போது?
வண்ணங்கள் நிறைந்த ஓவியத்தை
நான் வரைவது எப்போது?

வெளிநாட்டுப் பறவைகள்

தொண்டு நிறுவனங்களை குறைசொல்லாதீர்கள்
அவர்கள் எவ்வளவுதூரம் உதவுகிறார்கள்
எங்களுக்கு
உணவு பொருட்கள்!
மருந்துப் பொருட்கள்!
பாடசாலைப் பை!
இன்னும் சில அத்தியாவசிய பொருட்கள்
அனர்த்தங்களின்போதும்
போரின் முடிவிலும்
கோபக் கனலுடன் துடித்துக்கொண்டிருக்கும்
எங்கள் உணர்வெழுகையை
அவர்கள்தான் சாதுவாக அமைதிப்படுத்துவர்

காடைக்குருவிகளும் கங்காணிச் சத்தமும்

என் தந்தையொரு தொழிலாளி
தாய் கொழுந்து பறிப்பவள்
கோடைக்கால பாடசாலை விடுமுறையொன்றில்
அவர்கள் வேலை செய்யும் மலைகளுக்கு
தேனீர் கொண்டு செல்லும் சிறுமி நான்

முகத்தைச் சுடும் வெய்யிலையும்
சிலவிதக் குருவிகளையும்
அதனைத் துரத்தும் காட்டுப் பருந்தையும்
அம்மலையில் நான் கண்டிருக்கிறேன்
கங்காணி போடும் சத்தத்தில்
தேயிலைத் தூரில் மேயும் காடைக்குருவிகள்
கூட்டமாய் சிதறிப்பறப்பதை கண்டு பயந்திருக்கிறேன்
ஏதேனும் எழுதத் தோன்றுகிறது
வியர்வை ஊறிய முகத்துடன் பாதையோரம் அமர்ந்து
அவர்கள் தேனீர் அருந்தும் அழகைப் பார்த்ததும்

காத்திருக்கும் பூங்கொம்பு

ஒரு பூவைப்போல்
இதழ்விரித்துக் காத்திருந்தேன்
நீ சூடிக்கொள்ளவில்லை

எவரெவர் முகங்களையோ
தடவி வரும் காற்று
அனுமதியின்றி என் முகத்தைத்
தொட்டுச் செல்லும்போது
இதழ்கள் நிமிடங்களாய்
உதிர்கின்றன

ரீங்கரித்து வரும் வண்டுகள்
கள் உறிஞ்சும் வேளைகளில்
அந்தரங்க மகரந்தம் மண்ணில்
புதையுறுகிறது

பின்னிரவில் பூ முகமெங்கும்
ஊறிய பனித்துளிகள்
ஒவ்வொன்றாய்ச் சிதறிவிழும்போது
மௌனத்தின் நிலம்
நனைக்கப்பட்டுக்கொண்டே
இருக்கும்.
உனது நினைவின்
இழைகளில் வேர்விட்டு

ஒரு பூவாய்க் கரைந்து
கொண்டிருக்கிறேன்

பகல் சூரியனின்
சிவந்த கதிர்களை
உடலெங்கும் அணிந்து கொண்டு
அந்தகாரப் புணர்ச்சிக்கு
நீ ஊர்ந்து வரும் வேளைகளில்
இதழ் உதிர்ந்த பூங்கொம்பாய்
நின்றிருப்பேன்

குறிப்பு

குறிப்பு

குறிப்பு

தவச்செல்வன் தொடர்பாக நிறையவே சொல்லலாம். தேடல் மிகுந்த ஓர் இளம் ஆய்வாளன் இவர் எனில் மிகையாகாது. மலையகப் பாரம்பரிய கலைகள் தொடர்பாக தொடர்ச்சியாகவும், மலையக நாவல்கள், படைப்புகள் தொடர்பாகவும் காத்திரமான விமர்சனப் பார்வையை உடையவர் எனலாம்.

ஒரு புதிய தளத்தில் அவரது பார்வை உள்ளது என்பதற்கு '[illegible]' கவிதைத் தொகுதி ஒரு சான்றாகும். மூத்த படைப்பாளிகளுடன் நெருங்கிய தொடர்பு அதேவேளை புதிய இலக்கிய செல்நெறிகளுடன் ஊடாட்டம் புரிக்க த.தவச்செல்வன் நல்ல ஆர்வமுடைய பல அம்சங்களை உடையவராகத் திகழ்கின்றார் என நம்பலாம்.

மொழிவரதன்

டார்வினின் பூனைகள்

உண்மையில், இத் தொகுதியில் தவச்செல்வன் தனது கவிதை மொழியை மேலுஞ் செம்மையாக்கியுள்ளாரென்று சொல்லவேண்டும். இத் தொகுதியிலுள்ள கவிதைகள் முன்னைய "சிவப்பு டைனசோர்கள்" தொகுதியின் கவிதைகளினுங் கூடிய இறுக்கத்துடனும் செய்நேர்த்தியுடனும் உள்ளன. படிமங்களைக் கையாளுவதில் தவச்செல்வனுக்குள்ள ஆற்றல் பற்றிப் போனமுறை கூறிய நினைவுண்டு. இத் தொகுதியிற் படிமங்கள் கவிதைப்பொருளுக்கு மேலும் பொருத்தமாக உள்ளமை ஒரு சிறப்பு.

இப் படைப்பு முன்னையதினும் பரவலான படிப்புக்கும் சுவைப்புக்கும் ஆழ்ந்த பரிசீலனைக்கும் உள்ளாகுமென நம்புகிறேன்.

சி.சிவசேகரம்

300.00 LKR

ISBN 978-955-44552-3-8

9 789554 455238